# அஞ்ஞாடி புதினம் பேசும் வண்ணார் இனக்குழுத் திருமணம்

**மா. பாலமுருகன்**
முனைவர்ப் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783223

**ஆய்வுச்சுருக்கம்**

*புதின இலக்கியப் படைப்புகள் குறிப்பிட்ட நிலம் சார்ந்த மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்கிற போது இனவரைவியல் கூறுகளையும் இணைத்தே பேசிவிடுகிறது. பூமணியின் அஞ்ஞாடி புதினம் இனக்குழு மக்களின் வாழ்வியலையும் வரலாற்றையும் பேசியுள்ளது. ஆண்டி, மாரி, பெரிய நாடார் என்ற மூன்று முதன்மை மாந்தர்களின் இனக்குழு வரலாற்றையும் மாற்றங்களையும் பதிவு செய்துள்ள புதினம், மாரி வண்ணார் இனக்குழுத் திருமணத்தையும் திருமண முறைகளையும் இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *பூமணி, அஞ்ஞாடி, கரிசல் வட்டாரம், இனக்குழு, இனவரைவியல், வண்ணார், திருமணம், விருந்து.*

## முன்னுரை

*மக்களின் வாழ்வியல் மரபுகளை முன்னெடுத்துப் பேசுவதில் தற்கால இலக்கியங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இதில் குறிப்பிடும்படியான வடிவமாகக் கருதப்படுவது புதின இலக்கியமாகும். புதினங்களில் குறிப்பிட்டப் பகுதி மக்களுடைய வாழ்வியலைப் பேசும் போது அது வட்டாரம் சார்ந்த பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றது. கரிசல் வட்டார இலக்கியங்கள், அந்நிலப்பகுதியின் வாழ்வியல் சிக்கல்களை முதன்மையாகக் கொண்டு படைப்பாக்கம் செய்யப்படுகின்றன. கரிசல் கதைகளில் பெரும்பாலும் கரிசல் நிலவாழ் மக்களின் வறுமையும், அவல வாழ்க்கையுமே அடிப்படைக் கருவாக அமைந்திருக்கக் காணலாம். இயற்கையால் வஞ்சிக்கப்பட்ட பூமியாகக் கரிசல் நிலம் உள்ளதைப் படைப்புகள் எடுத்துரைக்கின்றன. பூமணியின் படைப்புகளும் கரிசல் மக்களின் நிலம் சார்ந்த வாழ்வியலை இயல்பாகவும் யதார்த்த முறையிலும் பேசுகின்றன. அவர் படைத்த "அஞ்ஞாடி" புதினம் கரிசல் நில மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்திருக்கிறது. வாழ்வியல் மரபுகளில் திருமணம் குறித்த பதிவுகளையும், அதில் வண்ணார் இனக்குழுவினரின் திருமண முறைகளையும் இக்கட்டுரை ஆராய்கின்றது.*

## அஞ்ஞாடி புதினத்தில் வாழ்வியல் மரபுகள்

*பூமணி தனது அஞ்ஞாடி புதினத்தைக் குறிப்பிட்ட இனக்குழு மக்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு படைத்துள்ளார். அவ்வினக்குழு மக்களை இனவரைவியல் அடிப்படையில் ஆராய்ந்து கதைப்பின்னல் வழிப் பேசியுள்ளமையால், இயல்பாக இனக்குழச் சார்ந்த வாழ்வியல் செய்திகள் புதினத்தில் வெளிப்பட்டுள்ளன. பள்ளர், வண்ணார், நாடார், கள்ளர், நாயக்கர் போன்ற இனக்குழு வாழ்வியலைப் புதினம் பதிவு செய்துள்ளது. 150-ஆண்டு கால வாழ்வியலைப் புதினம் பேசியுள்ளமையால், இனக்குழு மக்களின் வாழ்வியல் மரபுகளில் திருமண முறையும் அடங்கும். அஞ்ஞாடி புதினம், "ஆண்டி குடும்பர், மாரி வண்ணார், பெரிய நாடார்" என்ற மூன்று முதன்மை மாந்தர்களைக் கொண்டு படைக்கப் பட்டுள்ளது. அம்மூவரின் குடும்பங்களும், கரிசல் கிராமங்களும் 150-ஆண்டுகளில் பெற்ற தலைமுறை மாற்றங்களைப் புதினம் பேசியுள்ளமையால், இயல்பாக இனவரைவியல் அடிப்படையில் அம்மக்களின் வாழ்வியல் மரபுகள் பேசப்பட்டுள்ளன.*

**திருமணம்**

குடும்ப நிறுவனத்தின் அடிப்படையாக அமைவது திருமணமாகும். பாலியல் உறவின் வரையறை என்றாலும், வாரிசுரிமையின் வெளிப்பாடாகத் திருமண முறை தோன்றியது எனலாம். திருமண முறைகளும், சடங்குகளும் இனக்குழுக்களுக்கு ஏற்ப மாறுபட்டு அமைகின்றன. இனக்குழு அடையாளங்களில் ஒன்றாகவும் திருமணமும்சடங்களும்அமைந்திருப்பதையும் உணர முடியம். திருமணம் குடும்ப உறவை வரையறை செய்யும் பொருட்டே ஏற்பட்டது என்பதை,

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப**
**(தொல்., பொருள்., கற்பு., நூ.143)**

எனும் தொல்காப்பியர் கூற்றால் அறியலாம். அவர் காலத்திற்கு முன்பே மனிதன் களவில் ஈடுபட்டு மறுத்த நிலையில் திருமணம் என்ற நிலை தோன்றியுள்ளதை உணர முடிகிறது.

**ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாகும் நிகழ்ச்சி அல்லது சடங்கு'**
**(தற்காலத் தமிழ் அகராதி, ப.132)**

எனத் திருமணத்திற்குத் தற்காலத் தமிழ் அகராதி கூறும் விளக்கமும்,

மனித இனம் தன் பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்வதற்கு ஏற்படுத்திய முறையே திருமணம் (பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல், ப.518)

என்னும் பக்தவத்சல பாரதியின் கூற்றும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. கரிசல் நில மக்களின் திருமணத்தில் பெண்பார்த்தல், சாதகம் பார்த்தல், நிச்சயம் செய்தல், பந்தல் கால் நட்டுதல், பரிசம் போடுவது போன்ற திருமண முறைகளையும் மேளதாளம் கொண்டு பிராமணர் தலைமையிலும், பிராமணர் இல்லாமலும் திருமணம் நடந்துள்ளன. பெரும்பாலும் அகமண முறையாகவும், இனக்குழுக்களுக்குள் நடைபெற்ற திருமணங்களாகவும், சாதி மறுப்புக் காதல் திருமணங்களையும் அஞ்ஞாடி புதினத்தில் காண முடிகின்றது.

**வண்ணார் இனக்குழுத் திருமணம்**

அஞ்ஞாடி புதினம் காட்டும் வண்ணார் இனக்குழு ஊருக்கு ஒரு குடும்பம் என்ற நிலையில், இருக்கும் ஊரை நம்பி பிழைப்பு நடத்துகிறவர்களாக இருந்துள்ளனர். இக்குழுவினர் மற்ற ஊர்க் கிராமங்களிலுள்ள தங்கள் உறவுகளை அடிக்கடி சந்திப்பதில்லை. திருவிழா, பொதுக்கூட்டம், நிகழ்ச்சி, போராட்டம் என எந்தவொரு நிகழ்வுகளிலும் பங்கு பெறாத மக்களாகவே வாழ்ந்து வந்துள்ளனர். அவர்கள் தங்கள் இனக்குழுவிற்குள் அகமணம் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். திருமணத்தின் போது இக்குழுவினர் திருமணம் நடைபெறும் கிராமத்தில கூடுவர். அங்ஙனம் கலிங்கலூரணில் வாழ்ந்த மாரியின் திருமணத்தையும் அது சார்ந்த சடங்குகளையும் அஞ்ஞாடி புதினத்தில் காண முடிகின்றது.

**திருமணமும் வழக்கும்**

வண்ணார் இனக்குழுவின் ஊருக்கு ஒரு குடும்பம் மட்டுமே வாழ்ந்துள்ளமையால், அக்குடும்பங்களுக்குள்ளேயே திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். மேலும், நான்கு நாட்கள் திருமணச் சடங்குகளும் விருந்தும் நடைபெற்றுள்ளது. ஊர்ச்சோறு எடுத்து உண்டு வாழ்ந்த அவர்கள், திருமண நிகழ்வில் விருந்து சமைத்து அனைவரும் ஒன்றாக உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். தங்கள் உறவுக்குள் இருக்கும் பிணக்குகளை விருந்து பரிமாறுகிற போது வெளிப்படுத்தி, உண்ணாமல் எழுந்து சென்றுள்ளனர். இதனால், திருமண வீட்டார் விருந்து பரிமாறுவதற்கு முன்னர், அனைத்து உறவினரையும் பந்தியில் அமர வைத்துவிட்டு, உணவு பரிமாறிய பின்னர், அனைவரின் காலிலும் விழுந்து வணங்குவர். இதையும் மீறி நடைபெறும் சண்டைகளை வழக்குகளாகப் பேசி முடித்து விருந்தாடுவர். (சிவசுப்பிரமணியன், ஆ., தமிழக வண்ணார் வரலாறும் வழக்காறுகளும், ப. 74) மாரியின்

திருமணமும் அவ்வாறான முறையில் நடைபெற்றுள்ள அஞ்ஞாடி புதினம் பதிவு செய்துள்ளது.

மாரி திருமணத்தில் சொந்த பந்தமெல்லாம் கூடியமையையும், உறவினர்களைச் சரியாகக் கவனிக்கவில்லை என்றால் உடனே கோபித்துக் கொண்டு ஊர்ப் புறப்படுகிற நிகழ்வுகளையும், திருமண வீட்டார் உறவினர்களிடம் மன்னிப்புக் கேட்டு, இருக்க வைப்பதையும் ஆண்டி நினைவுகளின் வழிப் பூமணி பேசியுள்ளார். அவற்றை,

வண்ணாக்குடியில் நாலா ஊர் வண்ணார்களும் கூடியிருந்தார்கள். ஆண்டி அங்கிட்டும் இங்கிட்டுமாக அல்லாடினான். அவனுக்குக் கவலையெல்லாம் கலியாணம் நல்லபடியாக முடிந்து அயலூர்க்காரா;களை அல்லுச்சில்லில்லாமல் அனுப்பி வைக்கணும். மற்ற சனங்களைப் போலில்லை. எதுக்கெல்லாம் கோவித்துக் கொண்டு போய்விடுவார்கள். தயனாத்துப் பண்ணிக் கையைக் காலைப் பிடித்துக் கட்டி வரணும், நடந்தது சாணீயோ தப்போ நியாயம் பேசக் கூடாது. தப்பென்று ஒத்துக்கொண்டு மாப்புக் கேட்கணும். மாராயம் பண்ணி வருவார்கள் ஒவ்வொருவனும் ஒரு பொதிக்கு வழக்குக் கொண்டு வந்திருப்பான். சண்டி வழக்குத்தான் நிறைய இருக்கும் (பூமணி, அஞ்சாடி, ப. 51) என்ற பூமணி புலப்படுத்துகிறார்.

**திருமண விருந்து**

வண்ணார் இனக்குழுவினர் சொந்த குடியிருப்புகள் இல்லாமல், ஊர்ப் பொதுவிடத்தில், எந்த ஊருக்குத் தொழில் செய்கிறார்களோடு அந்த ஊரார் தரும் நிலத்தில் குடியிருப்புக்கள் அமைத்துக் குடியிருந்துள்ளனர். கூலியாகத் தானியங்களைப் பெற்றதோடு, தினமும் ஊர்ச்சோறு எடுத்து உண்ணும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஆகையால், தங்கள் குடும்பத்தில் நடக்கும் திருமணத்தில் நான்கு நாட்கள் கறி விருந்து சமைத்து உண்பர். சமையல் செலவைத் திருமண வீட்டார் மட்டுமல்லாமல், உறவினர்களும் பகிர்ந்து கொள்வர். ஆடு, மாடு, பன்றி உணவு வகைகளை விருந்தில் வழங்குவர். அங்ஙனம் மாரியின் திருமணத்தில் அசைவ உணவு அளிக்கப்படுவதை,

> **“தன்னை மதிக்கவில்லை, கறியில் நிறைய எழும்பு போட்டுவிட்டார்கள். மறுசோறு வைக்கவில்லை......**
>
> **(பூமணி, அஞ்சாடி, ப. 51)**

என்ற பகுதியால் அறியலாம். சவங்கச் சோறு பொங்கிப் போட்டு மாளாது. ஊருக்குப் புறப்படவில்லையா என்று ஒருவனையும் கேட்டுவிடக்கூடாது. கோவம் வந்து கிளம்பிவிடுவார்கள். அவனுக்குப் பின்னால் நான்கு போ; போய் விடுவார்கள். வீட்டுக்காரன் குடும்பத்துடன் கூப்பிடப் போகணும். வழக்குப் பேசி ஓய்ந்து ராசியாகி வருவார்கள். இந்த வேடிக்கை மூன்று நாளாவது நடக்கும். அத்தனை நாட்களும் சோறு தான், கறி சாப்பாடுதான். ஒரு குடும்பம் பன்றி வாங்கி வரும், இன்னொரு கூட்டம் கள்ளும் சாராயமும் கொண்டு வரும், சோறு பொங்கிக் கொண்டே இருக்கணும் என்று இக்குழுவினர் திருமணத்தைப் பூமணி விவரித்துள்ளார். ஊர்ச்சோறு எனப்படும் முறையில் நாளும் மற்றவர்களை நம்பி வாழும் இவர்கள், தங்கள்மேல் மற்றவர்கள் செலுத்தும் அதிகாரத்தினால் மன இறுக்கமடை இம்மக்கள் அதன்வடிகாலாக இவ்வாறன திருமணவீடுகளை எண்ணிக் கொண்டுள்ளமை விளங்கும்.

**சாதி மறுப்புத் திருமணங்கள்**

இனக்குழுக்கள்தங்களின்குழுக்களுக்குள் அகமணம் முடிப்பதையே பண்பாடாகக் கொண்டுள்ளசமூகத்தில், வேறு குழுக்களோடு திருமண உறவு வைத்துக் கொள்ளுதல் சமூக மாற்றமாகப் பார்க்கப்பட்டது. நெருங்கி சொந்தங்களுக்குள் நடைபெறும் அகமணங்களை மறுத்துத் திருமணங்கள் நடைபெற வேண்டும் என்று மருத்துவ ஆய்வுகளும் வலியுறுத்துகின்றன. இங்ஙனம் சாதிகளை மறுத்துத் திருமணம் நடைபெற வேண்டும் எனப் பெரியாரும்

சீர்த்திருத்தம் பேசினார். அஞ்ஞாடி புதினம் இனக்குழுச் சமூகங்களின் வாழ்வியல் மரபுகளில் சாதி மறுத்துத் திருமணம் செய்துள்ள நிகழ்வுகளையும் காண முடிகின்றது. மாரியின் வழித்தோன்றல், பேரனான மாரிமுத்துக் காவல்துறையில் பணியாற்றுகிற போது, நாடார் இனக்குழுவைச் சார்ந்த ராசலட்சு மியைக் காதல் திருமணம் செய்திருந்தான். அதனால், தனது ஊருக்குப் போகாமல் சென்னையிலேயே இருந்தான். இதனை அறிந்த ஆண்டியின் வழி தோன்றலான ஆண்டியப்பன் அச்சாதி மறுப்புத்திருமண சிக்கலைச் சரி செய்ய முற்படுகிறான். அதனை, இவ்வளவு தூரத்துக்கு ஆயிக்கிருச்சா. அதனாலதான் ஊருக்கு வர மாட் டங்கயா. ஒங்கம்மா என்னடான்னா புள்ளைக்கு நல்ல எடத்துல பொண்ணு பாக்கணும்னு கெடந்து அடிச்சுக்கிருது. அதுக்கு வேலையே இல்லாமப் பண் ணீட்ட. அது சரிதான் சொந்தச் சாதியில படிச்சு நாகரீகமாருக்கிற பொண்ண எங்க போய்த் தேடுறது. ஊர்ச் சோறு எடுத்துக்கிட்டு ஒவரு முறுக்கிக்கிட்டுத் திரியிற புள்ளதான் இருக்கும். ஆமா பொண்ணு யாரு எந்த ஊரு. நாடாரு பொண்ணு. பக்கத்துலதான் மளிகக் கட வச்சிருக்காக. மாடியில வீடு. பூர்வீகம் எட்டயாபுரத்துப் பக்கம். அவ காலேஜுல படிச்சுக்கிட்ருந்தப்ப எவனோ கிண்டல் பண்றான்னு எங்கிட்ட வந்து சொன்னாக. நான் அவனக் கண்டிச்சென். அதுலருந்து அவளோட பழக்கம்.

> **“அந்தப் பழக்கம் நெருக்கமாயிருச்சாக்கும். நீ யாருன்னு தெரிஞ்சுதான் பழகுனாளா.**
> **“எல்லாம் தெரியும்.**
> **“அப்பச் சரி.” (பூமணி, அஞ்சாடி, ப. 995)**

எனக் கதையாடலின் வழியே அறிய முடிகின்றது. சாதிய அடக்குமுறைகளில் ஆட்பட்ட இனக்குழுவிலிருந்து வந்த மாரிமுத்து, சமூக மதிப்பீடுகளால் மன அழுத்ததிற்கு ஆளாகிறான். தன்னுடைய தாயை ஒதுக்கி வைக்கும் அளவிற்கு அவன் மனம் வேதனை அடைந்திருந்ததையும் ஆசிரியர் விவரித்துள்ளார். காதல் திருமணம் என்பது இருவரைத் தாண்டி சமூகத்தால் எவ்வளவு அழுத்தங்களுக்கு உள்ளாகிறது என்பதையும், அதனால் ஒடுக்கப்பட்ட இனக்குழு மக்கள் எவ்வளவு மன வலிகளுக்கு ஆளாகின்றனர் என்பதை உணர முடிகின்றது.

**முடிவுரை**

கரிசல் இலக்கிய முன்னோடிய அறியப்படும் பூமணி யதார்த்த படைப்பாளி. தனது படைப்புகளை இனவரைவியல் அடிப்படையில் படைக்கும் திறன் படைத்தவர். அங்ஙனம் படைத்துள்ள படைப்புகள் யதார்த்தவாத போக்கிலும், கரிசல் வட்டார நிலவியல் சார்ந்தும், இனவரைவியல் கூறுகளை உள்ளடக்கியதாகவும் அமைந்திருக்கும். அவர் படைத்த அஞ்ஞாடி புதினம் 2012-ஆண்டு வெளிவந்துள்ளது. 1050 பக்கங்களில் 22 படலமாகவும் 227 உட்பிரிவுகளையும் கொண்டிருக்கின்றது. கழுகுமலை அருகிலுள்ள கலிங்கலூரணி என்னும் கிராமத்தை மையமாகக் கொண்டு, ஆண்டி, மாரி, பெரிய நாடார் என்ற மூன்று இனக்குழு மக்களின் வாழ்வியல் வரலாற்றைப் புதினம் பேசியுள்ளது. வண்ணார் இனக்குழுவினர் மிகவும் அடிமை நிலையில் இருந்துள்ளமையையும், அவர்கள் பிற இனக்குழுக்களைச் சார்ந்து வாழ்ந்துள்ளமையையும், வறுமையில் பலர் மடிந்துள்ளதையும் புதினத்தில் காண முடிகின்றது. வண்ணார் இனக்குழுத் திருமணங்கள் தாங்கள் அடிமைப்பட்டிருந்த மன இறுக்கத்தை வெளிக்காட்டுவதாக நடைபெற்றுள்ளது. சடங்குகள் என்று பெரியளவில் இல்லை என்றாலும், விருந்தும் வழக்கும் திருமணத்தில் முதன்மையாக இருந்துள்ளமையை அறிய முடிகின்றது. ஆங்கில வரவால் கிடைத்த கல்வி, சுதந்திர இந்தியாவில் கிடைத்த சலுகைகளும் அவர்கள் உயர்வதற்கும், சாதி மறுப்புத் திருமணம் முடிப்பதற்கும் துணையாக அமைந்தன எனலாம்.

**துணைநூற்பட்டியல்**


1. தொல்காப்பியர், தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், சென்னை. 2010.
2. வள்ளுவர், திருக்குறள், கழக வெளியீடு, சென்னை. 1951.
3. பூமணி, அஞ்சாடி, க்ரியா பதிப்பகம், சென்னை. 2012.
4. எட்கர் தர்ஸ்டன், தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தமிழ்ப் பல்கலைக்கழகம். 1986.
5. சிவசுப்பிரமணியன், ஆ., தமிழக வண்ணார் வரலாறும் வழக்காறுகளும், NCBH. 2014.
6. மேலது., இனவரைவியலும் தமிழ் நாவலும், NCBH. 2012.
7. பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், மெய்ப்பன் பதிப்பகம், சென்னை. 2009.
8. தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா பதிப்பகம், சென்னை. 2009.